

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபுரம் பேரூராட்சி பகுதியில், கபடி உள் விளையாட்டு அரங்கம் அமைய இருக்கும் இடத்தினை இன்று (25.08.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

செ.வெ.எண்: 567/2016 நாள்: 25.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் கபடி உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு, தேர்வு செய்யப்பட்ட இடத்தினை இன்று (25.08.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபுரம் பேரூராட்சிக்குட்பட்ட அனுமன்குளம் அருகில் உள்ள பகுதியில், கபடி உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு, இடம் தேர்வு செய்யப்பட்டதை, இன்று (25.08.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, வீரர், வீராங்கனைகளின் விளையாட்டு திறனை மேம்படுத்துவதற்காகவும், அவர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுதுறை சார்பாக, பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அளத்தங்கரையில் கபடி உள் விளையாட்டு அரங்கம் அமைந்துள்ளது. மேலும், வீர, வீராங்கனைகளை ஊக்கப்படுத்துவதற்காக இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபுரம் பேரூராட்சி, அனுமன்குளம் அருகில் உள்ள பகுதியில், கபடி உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு, இடம் தேர்வு செய்யப்பட்டது. இதில் மூன்று கபடி மைதானம், ஒரு இறகு பந்து மைதானம் 70 சென்ட் அல்லது 3/4 ஏக்கர் நிலப்பரப்பில், 200 அடி நீளம் மற்றும் 54 அடி அகலம் கொண்டு அமையவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று இதனை ஆய்வு செய்யப்பட்டது என தெரிவித்தார்.

ஆய்வின் போது அர்ஜுனா விருது பெற்ற கபடி வீரர் திரு. ராஜரெத்தினம், கபடி இணை செயலாளர் திரு. சுபாஷ், கணபதிபுரம் பேரூராட்சி தலைவர் திரு. ராஜசேகரன், துணை தலைவர் திரு. கிருஷ்ணகுமார், திரு. என்.என்.ஸ்ரீ.ஐயப்பன், திரு. வேல்முருகன், திரு. ராஜரெத்தினம், திரு. ரெஜீஸ்ராஜ், திரு. ஜெயசீலன், திரு. கனகராஜ், திரு. அண்ணாமலை, திருமதி. பூமதி, திருமதி. கலைசெல்வி, திரு. செல்வகுமார், திரு. சூரியநாராயணன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.